# வேதாகமப் பாடங்கள்

*"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்."*

## தொகுதி 6

# புது சிருஷ்டி
# NEW CREATION

*"ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாய் இருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின."*

*– 2கொரி. 5:16,17*

முதற்பதிப்பு : 2007

**சென்னை வேதமாணவர் சபை**

*22, முதல் தெரு, ராஜீவ் நகர்,*

*காலாடிப்பேட்டை, சென்னை – 600 019.*

STUDIES IN THE SCRIPTURES
VOLUME VI

THE NEW CREATION
*Tamil Version*

I Edition 2007 - 1400 copies

**NOT FOR SALE**

*Translated by :*
**CHENNAI BIBLE STUDENTS**
No. 22, Ist Steet, Rajiv Nagar,
Kaladipet, Chennai - 600 019,
INDIA.



# ***அர்ப்பணிப்பு***

**ராஜாதிராஜாவும் கர்த்தாதிகர்த்தாவுமானவருக்கும்**

புத்திர சுவிகாரத்திரத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும்
பிரதிஷ்டைக்குட்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள்

மற்றும்

கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்

மற்றும்

தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து
தவித்து பிரசவவேதனைப்படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக

**இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.**

*“தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்
இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு,” “அந்தக்
கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில்
பெருகப் பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது
விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்
குள்ளே கூட்டப்படவேண்டுமென்று
தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்
முடைய தயவுள்ள சித்தத்
தின் இரகசியத்தை எங்
களுக்கு அறிவித்தார்.”
( எபே. 3:11; 1:8&10 )*

***போதகர் ரசல் அவர்களால் 1904 ல் எழுதப்பட்டது.***

# வெளியீட்டாளரின் முன்னுரை

சகோதரர் சார்லஸ் டி. ரஸ்ஸல் அவர்கள் எழுதிய ஆறு தொகுதிகளும் (Volumes) வேதமாணவர்களுக்கு மிகச் சிறந்த பொக்கிஷமாகும். ஏனெனில் அவர் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை மற்றும் ஆழ்ந்த சத்தியங்களை மிகத்தெளிவாக ஆறு தொகுதிகளில் கொடுத்திருக்கிறார். தமிழ் அறிந்த மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் நமது மூத்த சகோதரர்கள் **''யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு''** என்ற முதல் தொகுதியை தமிழில் மொழிபெயர்த்து நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அடுத்து **''காலம் சமீபமாயிருக்கிறது''** என்ற இரண்டாம் தொகுதியை நாங்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிறோம். காலம் மிகச் சமீபமாயிருப் பதினால் **''புது சிருஷ்டி''** என்கிற இந்த ஆறாவது தொகுதியை தமிழாக்கம் செய்து வெளியிட்டிருக்கிறோம்.

கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் தேவனுடைய புது சிருஷ்டி ஆகியவைகளைப்பற்றி புரிந்துகொள்ளுதலுக்கேற்ற அடிப்படைப் பாடங்கள் இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. புது சிருஷ்டி சம்பந்தப்பட்ட அதன் பொறுப்புகள், சிலாக்கியங்கள் உட்பட எல்லா விவரங்களையும் நுணுக்கமாக இந்த பாடம் விளக்குகிறது. நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஏதுவான வகையில் இந்த பாடங்கள் முழுமையாக வேதாகமகத்தின் அடிப்படையில், மாத்திரமல்ல முழு ஆலோசனையுடனும் அளிக்கப்படுகிறது. இந்த புத்தகம் அறிவு, ஆலோசனை ஆகியவற்றின் நிஜமான பொக்கிஷ பண்டகசாலையாக இருக்கிறபடியினால் உங்கள் அனுதின கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகளையும், சந்தேகங்களுக்கான பதில்களையும் இந்த புத்தகத்தை திரும்ப திரும்ப படிப்பதின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

நாங்கள் அதிக களிப்புடன் பெற்ற ஆசீர்வாதங்களை இதன் வாசகர்களும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த பதிப்பை ஜெபத்துடன் வழங்குகிறோம்.

வெளியீட்டாளர்

# புது சிருஷ்டி

## ஆசிரியரின் முன்னுரை

தேவனுடைய ஒவ்வொரு ஊழியக்காரரின் பெரும்பாலான வேலைகள் இருளிலே நடப்பிக்கப்படுகின்றன. எப்படியெனில், ஓர் அழகான கம்பளத்தை நெய்பவர்போல நாம் பின்னால் நின்று நம்முடைய முயற்சியின் பலன்களை சிறிதளவு பார்ப்பதோடு ஆண்டவர் குறித்தக் காலத்தில் ''நீ நன்றாய் செய்தாய்'' என்பதைக் கேட்போம் என்றும், சிறு பலனைக் காண்போம் என்றும் நம்புகிறோம். ''நான் அவருடைய சாயலில் விழிக்கும்போது திருப்தியாவேன்.''

இந்த புத்தகமானது உலகத்தின் பல்வேறு பாகங்களில் உள்ள தேவனுடைய மக்களின் இருதயங்களில் கிரியை செய்வதின் மூலமாக எங்களுக்கு ஆண்டவர் மிகுந்த கிருபையாக உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறார். தேவனுடைய வார்த்தையில் சபையாருக்கு வாக்குதத்தம் பண்ணப்பட்ட நீதிமான்களாக்கப்படுதல், பரிசுத்த மாக்கப்படுதல், மீட்பு ஆகியவற்றை நன்றாக புரிந்துகொண்டதின் நிமித்தம் பெற்ற ஆசீர்வாதங்களை அநேகரிடமிருந்து கேள்விப்படுவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. சமாதானம், நீதி, கிருபையில் வளர்தல் ஆகிய வழிகளைப் பற்றி புருஷர்களுக்கும், மனைவிகளுக்கும், பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்ட வேத ஆலோசனைகள் மூலம் பெற்ற ஆசீர்வாதங்களை அநேகர் எங்களுக்கு சொல்லியிருக்கிறார்கள். சபையில் வேத ஒழுங்கு முறைகளைக்குறித்தும், மூப்பர், உதவிக்காரர் ஆகியோரின் கடமைகள், சிலாக்கியங்கள் மற்றும் வேலைகளைக் குறித்தும் பெற்ற பெரும் ஆசீர்வாதங்களையும், உதவிகளையும் பற்றி மேலும் அநேகர் எங்களுக்கு தெரிவித்துள்ளார்கள். அவருடைய ஜனங்களின் ஆறுதலுக்கும், பக்தி விருத்திக்கும் ஆண்டவருடைய புகழ்ச்சிக்கும் ஏதுவாக தெய்வீக வழிநடத்துதலுக்குள்ளாக இந்த நற்கிரியைகள் தொடரும் என்று நம்பி நாங்கள் இவைகளில் களி கூறுகிறோம்.

இந்த புத்தகம் எழுதப்பட்ட நாளிலிருந்து தேவனுடைய பெரிய உடன்படிக்கைகளைக் குறித்த வெளிச்சம் இன்னும் தெளிவாக வளர்ந்திருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். நியாயப்பிரமாண உடன்படிக்கை தலையாகிய இயேசுவும், சரீரமாகிய சபையும் சேர்ந்த பெரிய மத்தியஸ்தரால் இரண்டாம் வருகையில் ஸ்தாபிக்கப்பட போகிற புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கைக்கு ஒரு முன்னடையாளமாக இருந்ததை இப்பொழுது நாம் காண்கிறோம். ''என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்'' என்று எழுதின மோசேயின் கூற்றுக்கு ஒத்த வண்ணமாக இயேசு நிஜப்பொருளாயிருக்கிறார் (பெரிய தீர்க்கதரிசியாக இருக்கிறார்). மோசே இந்த பெரிய தீர்க்கதரிசிக்கு ஒரு முன்னடையாளம் மட்டுமே. மோசே மத்தியஸ்தராக இருந்து கொடுத்த அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கை ஆயிர வருஷ யுகத்தின் பெரிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கைக்கு வெறும் முன்னடையாளம் அல்லது நிழலாக மாத்திரம் இருந்தது.

தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின போது அவர் முதலாவது இந்த பெரிய மத்தியஸ்தரின் தலையாக எழுப்பினார். அந்த காலத்திலிருந்து அவர் சபையை ஒரு புது சிருஷ்டியாக எழுப்பிக்கொண்டிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமான சபையிலுள்ள எல்லா சகோதரர்களும் உலகத்திலிருந்து சத்தியத்தை அறிகிற அறிவின் மூலமாக கூட்டி சேர்க்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் பரிசுத்த மாக்கப்பட்டு, மரண பரியந்தம் விசுவாசத்தின் மூலம் தகுதி உள்ளவர்களாகக் காணப்பட்டு எல்லோரும் தேவனுடைய வல்லமையினால் பூமிக்குரிய நிலைமையிலிருந்து கிறிஸ்துவின் சரீரமான சபையாக பரலோக நிலைமைக்கு உயர்த்தப்பட்டிருக்கும் போது பெரிய நிஜப்பொருளான மெல்கிசேதேக் முழுமையடைந்து ஓர் ஆசாரியராக, புது உடன்படிக்கையின் பெரிய மத்தியஸ்தராக, தெய்வீக வல்லமையினால் அவருடைய சிங்காசனத்தில் ஏறுவார். ''இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை உண்டு பண்ணுவேன்'' என்று தேவன் இஸ்ரயேலருக்கு சொன்ன பிரகாரமாக இந்த புது உடன்படிக்கை பிறகு செயல்பட துவங்கும்.

ஆதாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும் ஈடுபலியை தேவ நீதிக்கு முழுமையாகவும், எக்காலத்திற்குரியதாகவும் செலுத்திய பிறகு, நிஜப்





பொருளாயிருக்கிற மத்தியஸ்தர் முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்வார். மேலும், புது உடன்படிக்கையின் கீழ், இப்படியாக முத்திரையிடப்பட்டு, ஆதாமின் சந்ததியில் மனப்பூர்வமாக கீழ்ப்படிவோருக்கு ஆசீர்வதிக்கும் வேலையையும், இழந்து போனதைத் திரும்பக்கொடுக்கும் வேலையையும் செய்யத் தொடங்குவார். தேவனோடு ஒருமனப்படுபவர்கள் எல்லோரும் ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியின் பகுதியாக எண்ணப்படுபவர்கள்; ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவு வரைக்கும், விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் கடைப்பிடித்தால் ஆபிரகாமின் சந்ததியாக தேவனுக்கு விளங்குவார்கள். ''அந்த சந்ததியாக மாறும்போது, தேவாசீர்வாதத்தை பெற்றுக் கொள்வார்கள்.''

புது உடன்படிக்கை என்ற பெயர் ஆயிர வருஷ அரசாட்சியில் தேவன் உலகத்தாரோடு தொடர்புகொள்ளுவதற்கு சொந்தமானது. ஆனால் இந்த பெயர் இந்த சுவிசேஷ யுகத்தில் சபையோடு செய்யும் உடன்படிக்கைக்கு தவறுதலாக உபயோகப்படுத்தப்படுகிறது. நம்முடைய உடன்படிக்கை உண்மையிலேயே சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட யூத உடன்படிக்கையிலும் வித்தியாசமான ஒரு புது உடன்படிக்கையா யிருக்கிறது. ஆனாலும் இது புது உடன்படிக்கையல்ல. சபையின் உடன்படிக்கை வேதத்தில் ''பலியினால் உண்டான உடன்படிக்கை'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த விஷயங்களை மனதில் வைத்துக் கொள்வது இந்த புத்தக வாசகர்களுக்கு பிரயோஜனமாயிருக்கும். இந்த உடன்படிக்கைகள் எல்லாம் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை களாகும். தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையும் மற்ற உடன்படிக்கைகளும் அவனுக்குள் முன்மாதிரியாகவும் முன்னடையாள மாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சபையானது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி என்று அழைக்கப்படுவதுடன் வானத்து நட்சத்திரங்களுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது. மனுக்குலம் தேவனோடு ஒருமனப்படும்போது, அவர்கள் கடற்கரை மணலைப்போல ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியாவார்கள். ஆவிக்குரிய சந்ததியார் ஜென்மசுபாவமுள்ள சந்ததியாருக்கு ஆசீர்வாதத்தின் வழியாக இருப்பார்கள்.

நீதிமானாக்கப்படுதல் என்பதின் பொருள் மாறவில்லை. ஆனால் அது விரிவாகியும், தெளிவாகியும் இருக்கிறது. இன்று இந்த புத்தகத்தை எழுதும்போது ஆசிரியர் உபயோகிக்கிற மொழியில் சிறிது மாறுதல்களை

செய்தாலும் நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தையின் பொருளும் செயல்பாடும் எந்தவித மாற்றமும் அடையவில்லை.

வாழ்க்கைக்கு நீதிமானாக்கப்படுவது என்ற ஒன்றையும், தேவனுடன் ஏறத்தாழ உள்ள நட்புக்காக நீதிமானாக்கப்படுதல் என்ற வேறொன்றையும் நாம் இப்போது காண்கிறோம். உதாரணமாக, ஆபிரகாமும், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னாக உள்ள விசுவாச மார்க்கத்தாரும், தேவனோடு நட்புக் கொள்வதற்கும், ஜெபத்தின் மூலமாக ஏறத்தாழ தொடர்பு கொள்வதற்கும் நீதிமானாக்கப்பட்டார்கள். ஆனால் பாவநிவாரண இரத்தம் சிந்தப்பட்டு தெய்வீக நியாயாதிபதியாகிய பிதாவினிடத்தில் அளிக்கப்பட்டு அவரால் அங்கீகரிக்கப்படும் வரை அவர்கள் முழுமையாக நீதிமானாக்கப்படுதலை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அது போலவே இன்றைக்கு பாவி தன்னுடைய பாவத்தை நோக்குவதைக் காட்டிலும் தேவனிடத்தில் நெருங்கி வரும்போது அவன் நீதிமானாக்கப்படுதலின் வழியில் இருப்பதாக சொல்லப்படுவான்; அவன் தேவனுடைய அநேக அநுக்கிரகங்களைப் பெற்றிருப்பான். நீதிமானாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையில் இருந்த ஒரு பாவியைக் குறித்து நாங்கள் ஒருமுறை பேசினோம். ஏனென்றால், அவன் இயேசுவை தன் இரட்சகராக விசுவாசித்து ஒரு முழுமையான பிரதிஷ்டைக்கு நேராக தன்னை நடத்திக்கொண்டிருந்தான். ஆனால் ஒரு பாவியினுடைய மனோநிலை பழைய ஏற்பாட்டு விசுவாசிகளைப் போல ‘‘பரீஷார்த்தமான நீதிமானாக்கப்படுதல்’’ என்று எண்ணப்படுவதாக இருந்தாலும் அவன் தன்னை பிரதிஷ்டையில் முற்றிலுமாக நம்முடைய மகா பிரதான ஆசாரியரான இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்து, இயேசு அதை பிதாவின் நாமத்தில் ஏற்றுக்கொள்ளும் வரையில் அது பாவத்திலிருந்து முழுமையான பூரமாண நீதிமானாக்கப்படுதலின் நிலையை அடையாது என்று நாம் இப்பொழுது காண்கிறோம். அதன் பின்னர் கிறிஸ்துவின் பலியின் பலனுக்குட்பட்டு அந்த பாவி பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு கிறிஸ்துவின் வஸ்திரத்திற்குள்ளாக பிதா ஏற்றுக்கொள்ளும் நிலையிலிருப்பான்.

அதிர்ஷ்டவசமாக இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டு அரைகுறையாக நம்பின ஜனங்களுக்கு அவர்கள் தேவனோடு கொண்டிருந்த ஸ்தானம் முழுமையாக நீதிமானாக்கப்பட்டது என்பதல்ல.





ஏனெனில் எவரையும் அவர் உடன்படிக்கையின்படி தனது சீஷர்களாகாமல், அவருடைய அடிச் சுவடுகளைப் பின்பற்றாதவரை அவர்களை முற்றிலுமாக நீதிமான்களாக்க மறுக்கிறார். இது இப்படியாக இருப்பதின் காரணமென்னவென்றால், நீதிமானாக்கப்படுவது என்பது ஒருவருக்கு ஒருமுறைதான் கிட்டும். அது மாத்திரமல்ல, அவன் அந்த நீதியை தவறாக பயன்படுத்தி, நித்திய ஜீவனைப் பெற தவறினால் அவன் நீதிமானாக்கப்படாமலிருந்த நிலையைக்காட்டிலும் மோசமான நிலையிலிருப்பான். தற்போது அவன் நீதிமானாக்கப்படாமல் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமலிருந்தால் அவன் சபையைச் சேர்ந்தவனல்ல. ஆனால் மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவருடைய ராஜ்யத்தில் அருளப்படுகிற, இயேசுவின் பலியினாலுண்டான நன்மையிலும், நீதியிலும் ஒரு பங்கை உடையவனாயிருப்பான். இது சபையிலிருந்து தனியானது – சபை மேலான காரியத்தைப் பெறுகிறது. அவையாவன : தேவன் தன்னில் அன்பு கூறுகிறவர்களுக்கென்று ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற மகிமை, கனம், அழியாமை, தெய்வீக சுபாவம் போன்றவைகளே.

நீதிமானாக்கப்படுதல் என்ற பொருளில் உள்ள சிறப்புகளைக் குறிப்பிடுவது அநேகருக்கு பிரயோஜனமுள்ளதாக தோன்றாது. இருந்த போதிலும், தெய்வீக திட்டத்தை குறித்த்தான மிகத் தெளிவான மேன்மையை பெற்றுக்கொண்ட பிறகு, நீதியின்மேல் பசி தாகமுள்ளவர்களுக்கு – எங்குமுள்ள எல்லா வேத மாணவர்களுக்கு, இதை அறிவிப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியை அடைகிறோம்.

தேவன் தன்னுடைய ஜனங்களின் நன்மைக்கென்று இந்த புத்தகத்தை ஆசீர்வதிக்க வேண்டுமென்பதே ஆக்கியோனின் ஜெபமாக இருக்கிறது.

புருக்கிலின், நியுயார்க். சார்லஸ் டி ரஸ்ஸல்.
அக்டோபர் 1, 1916.

BLANK



# பொருளடக்கம்

## அத்தியாயம் 1

## ஆதியிலே

*பலவித ஆதிகள்–முன்னிருந்த பூமி –அதை ஒழுங்குபடுத்தும் ஒரு சிருஷ்டிப்பின் வாரம்–யுக நாளின் கால அளவு–விஞ்ஞானிகளின் அனுமானங்கள் பொருத்தமில்லாதது என பேராசிரியர் தானாவின் ஒப்புதல்–பல வகையான இனங்களின் மாறாத்தன்மை பரிணாமக் கொள்கையை தவறு என நிரூபிக்கிறது– டார்வினின் புறாக்கள்–பிரபஞ்ச தோற்றத்தின் ஒரு கோட்பாடு–பேராசிரியர் சில்லிமேன் மற்றும் தானாவின் உண்மையுள்ள சாட்சியங்கள்– முதலாவது சிருஷ்டிப்பின் யுக நாள் – இரண்டாவது....நாள் – மூன்றாவது.... நாள் – நான்காவது....நாள் – ஐந்தாவது....நாள்–ஆறாவது.... நாள்–ஏழாவது யுக நாளின் விடியலில் மனிதன், பூமியின் ராஜா சிருஷ்டிக்கப்பட்டான்–சர்.ஜே.டபிள்யு.டாசன், எல்.எல்.டி., எப்.ஆர்.எஸ். அவர்களின் ‘‘புவியியலும் சரித்திரமும் சந்திக்கும் இடம்’’ என்ற நூலின் சாராம்சம்–சிருஷ்டிப்பின் வாரத்தின் ஏழாவது யுக நாள்–அதன் காலஅளவு– அதன் நோக்கமும் பலனும்– வானத்துக்குரிய, பூமிக்குரிய பெரிய யூபிலி, அதன் நிறைவின் காலம். .... 1*

## அத்தியாயம் 2

## புது சிருஷ்டி

*புதுசிருஷ்டி மற்ற எல்லாவற்றிலுமிருந்து வித்தியாசமானது, வேறுபட்டது – மற்றவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளாமல் மனுக்குலத்திலிருந்து ஏன் தெரிந்து கொள்ள வேண்டும் – இந்த தெரிந்து கொள்ளுதலின் நோக்கம்–தற்கால, எதிர்கால காரியங்கள் – எப்படி புது நிலைமைக்கு உற்பவித்து பிறக்கிறது – அதன் எல்லா அங்கத்தினர்களுக்கிடையேயும் மற்றும் அவர்களது தலையும் தலைவரும் மணவாளனுமானவரோடும் உள்ள நெருங்கிய உறவு – அங்கத்தினர்களின் அபிவிருத்தியும் சோதனைகளும் – புது சிருஷ்டி*

ஆவிக்குரியவைகளை பகுத்துணர் வதற்கான ஆறாவது அல்லது ஆவிக்குரிய அறிவு–தலையானவரிடம் விசுவாசமாயிருப்பதற்கும் எந்த சகோதரரிடமிருந்தும் பிரியாமலிருப் பதற்கும், எந்த நாமத்தின் மூலம் புது சிருஷ்டி அழைக்கப்பட வேண்டும்? .... 57

## அத்தியாயம் 3

## புது சிருஷ்டியின் அழைப்பு

''அழைக்கப்பட்டவர்கள்'' மட்டுமே தகுதியானவர்கள் –இந்த ''பெரிய இரட்சிப்பு''க்கான அழைப்பு எப்பொழுது ஆரம்பித்தது – மனந்திரும்பு தலுக்கான ஓர் அழைப்பு, திவ்விய சுபாவத்திற்கான ஓர் அழைப்பல்ல– யூதயுக அழைப்பு–சுவிசேஷ யுக அழைப்பு–ஞானிகள், வல்லவர்கள், கற்றுத்தேர்ந்தவர்கள் ஏன் அநேகரில்லை–உண்மையான தாழ்மையின் மேல் மேலான நிபந்தனை– அழைப்புக்கு குணாதிசயம் ஒரு நிபந்தனை– ஆயிர வருட யுகத்தில் உலகம் அழைக்கப்படாது, கட்டளையிடப்படும் – சுவிசேஷ யுக அழைப்பு காலவரையரைக்குட்பட்டது– புது சிருஷ்டி பிதாவினால் அழைக்கப்படுகிறது அல்லது இழுத்துக் கொள்ளப் படுகிறது–கிறிஸ்துவே நமது ஞானம்–கிறிஸ்துவே நமது நீதி – உண்மையான நீதிமானாக்கப்படுதலும், நீதிமானாக எண்ணப் படுதலும் வெவ்வேறானது–''புதுசிருஷ்டிக்கு'' நீதிமானாக்கப்படுதல் அவசியமா? – பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகளின் நீதிமானாக்கப்படுதல் நம்முடையதைக் காட்டிலும் வித்தியாசமானது – ஆயிரம் வருட யுக நீதிமானாக்கப்படுதல் – கிறிஸ்து நமக்கு பரிசுத்தமானார்– ஆயிரம் வருட யுக பரிசுத்தமாக்கப்படுதல் – லேவியரின் மாதிரியான இரண்டு விதமான அர்ப்பணிப்புகள்–நிலபுலன்களில் சுதந்திரமில்லை–திரள் கூட்டம் – பரிசுத்தமாகுதலின் இரு பகுதிகள் –தேவனுடைய பங்கு – மனிதனுடைய பங்கு – அனுபவங்கள் இயற்கையான பண்புகளிலிருந்து மாறானது – பரிசுத்தமாகுதல் பூரணப்படுதலோ அல்லது உணர்ச்சிவசப்படுதலோ அல்ல–''உன் நோய்களுக்கெல்லாம் அவரே பரிகாரி– கிருபையின் சிங்காசனத்தின் அவசியம்– எப்படி நீதிமானாக்கப்படுதல் பரிசுத்த மாகுதலோடு இணைகிறது–''பரம அழைப்பு'' முற்றுப்பெற்றதிலிருந்து பிரதிஷ்டை– சபையின் மீட்பு அல்லது இரட்சிப்பு. .... 91



## அத்தியாயம் 4

## புது சிருஷ்டி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது

தெரிந்துகொள்ளப்படுதலைப்பற்றி பொதுவான கண்ணோட்டம்– சரியான சிந்தனை – தெரிந்துகொள்ளப்படாதவர்களுக்கு தீங்கு ஏதும் இல்லை –தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும், விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் – மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு–''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாய் இருக்குமே ''– திரள்கூட்டம் – அவர்களுடைய வஸ்திரங்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுக்கப்பட்டது–தெரிந்துகொள்ளப்பட்ட திராட்சை செடியும் அதன் கொடிகளும் – கடந்த காலத்தில் உள்ள பல்வேறுவிதமான தெரிந்து கொள்ளுதல் – இவைகளில் சாகாமைக்குரியது ஏதுமில்லை –ஏசாவும் யாக்கோபும் முன்னடையாளம் – ''யாக்கோபு நான் உன்னை நேசித்தேன்'' – ''ஏசாவை நான் வெறுத்தேன்''–பார்வோன்–இந்த காரணத்திற்காகவே உன்னை நிலை நிறுத்தினேன்–தேவன் ஒருபோதும் சித்தத்தை பலவந்தம் பண்ணுகிறவரல்ல – பார்வோனும் இதற்கு விதிவிலக்கல்ல – ''தேவன் பார்வோனின் இருதயத்தை கடினப் படுத்தினார் ''– இஸ்ரேல் தேசம் தெரிந்து கொள்ளப்பட்டது –''இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன? அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது'' – தெரிந்து கொள்ளப்பட்ட ''புது சிருஷ்டி''–கிருபையின் முக்கியத்துவம் – ''இராஜாவுக்கு சொந்தமானவர்கள்'' என்பதின் விளக்கம்–அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறிக்கப் பட்டவர்கள் – ''அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள்'' – அழைக்கப்பட்டவர்களின் தகுதிகளும் குணாதிசயங்களும்–''தேவன் நம் பட்சத்தில் இருந்தால்''–அப்போஸ்தலரின் விவாதத்தின் சுருக்கம் – நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் – ஓட்டப் பந்தயம் – நான் இலக்கை நோக்கி தொடர்கிறேன் – ''நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதை அறிந்துகொள்ளுதல்.'' .... 197

# அத்தியாயம் 5

## புது சிருஷ்டியின் அமைப்பு

ஆவிக்குரிய ஆலயத்தின் ''ஜீவனுள்ள கற்கள்''–உண்மையான புது சிருஷ்டிக்கும் பெயரளவான புது சிருஷ்டிக்கும் இடையே உள்ள வித்தியாசம்–''தேவ இரகசியமும் '' ''அக்கிரமத்தின் இரகசியமும் '' – அந்திக் கிறிஸ்துவின் மாபெரும் அமைப்பு–வேத வாக்கியங்கள் நம்பத்தகுந்தவை – உலகத்துக்கும் ஆலயம் செல்வோருக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள சுயாதீனம் – குழப்பத்தில் ஓர் ஒழுங்கு – ''குறித்தகாலத்தில்'' –''யுகங்களின் முடிவு''–பிதாவினால் நடப்பட்ட திராட்சை செடி – ''ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்'' – யூதாசின் இடத்துக்கு வந்த பவுல் – அப்போஸ்தலரின் எண்ணிக்கை பன்னிரெண்டுதான் – அப்போஸ்தல அதிகாரம்– அப்போஸ்தலரின் உறுதியான குணாதிசயங்கள்– அப்போஸ்தலர் பவுல், மற்ற அப்போஸ்தலரிலும் ஒன்றிலும் குறைவானவர் அல்ல– பன்னிருவரின் ஊக்கம்– அப்போஸ்தலர்கள் எழுதியவைகளின் மேல் தெய்வீக கண்காணிப்பு –''இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்''– சுவிசேஷங்களின் இசைவு–அதிகாரத்தின் திறவுகோல் – அப்போஸ்தலரின் தவறாமை–எதிர்ப்புகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன – ''கிறிஸ்து ஒருவரே உங்கள் குருவாயிருக்கிறார்'' – ''தேவனுடைய மந்தையே'' உண்மையான சபை– அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், ஊழியக்காரர்கள், போதகர்கள்– தேவனின் அமைப்பாகிய புது சிருஷ்டி முழுமையாக நிறைவடைந்தது– அதன் மேற்பார்வையாளரும் அவரே–ஆவியின் வரங்கள் அதன் தேவைக்குப் பிறகு நின்று போனது–''பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தின்'' ஐக்கியம் –சக்திகளின் ஐக்கியம், கிறிஸ்தவனுக்கு எதிரானவர்கள் – பிஷப்புகள், மூப்பர்கள், உதவிக்காரர்கள் – ''தீர்க்கதரிசி'' என்ற வார்த்தையின் விசேஷித்த பொருள் – மனத்தாழ்மை மூப்பருக்கு அத்தியாவசியமானது – மற்றத் தேவையான தகுதிகள் – உதவிக்காரர்கள், ஊழியக்காரர்கள், வேலையாட்கள் – சபையில் போதகர்கள்– அநேகர் போதிக்க சாமர்த்தியம் உள்ளவர்களாயிருக்க வேண்டும் – ''சகோதரரே, உங்களில் அநேகர் போதகர்களாகா



திருப்பீர்களாக'' –''ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை'' – ''போதிக்கிறவனும் போதிக்கப்படுகிறவனும்'' – சபையில் ஸ்திரீகளின் பங்கு – ஸ்திரீகள் உடன் வேலையாட்களாக– ''அவள் தலையை முக்காடிட்டுக்கொள்ளக்கடவள்.'' .... 241

# அத்தியாயம் 6

## புது சிருஷ்டியில் முறையும் ஒழுங்கும்

நியமனம் பண்ணுதலின் பொருள்–பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மட்டுமே பூரண அதிகாரம் பெற்றவர்கள்–''மதகுருமார்களும்'' ''பொது ஜனங்களும்''– மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் – ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துதல் – யார் மூப்பரை தேர்ந்தெடுக்கலாம், எப்படி – பெரும்பான்மையாயிருப்பது போதுமானதல்ல – பல்வேறுவிதமான ஊழியங்கள் – சம்பளம் பெறும் ஒரு ஊழியமா?– சபையில் ஒழுங்கு முறை – பிரசங்கிக்கும்படியாக அழைப்பு வந்தது என்று தவறாகப் புரிந்து கொள்வது – ஒழுங்கில்லாதவர்களை எச்சரியுங்கள்– எச்சரிக்க வேண்டும் என்பது பொதுவான கட்டளை அல்ல– வெளிப்படையாகக் கடிந்துகொள்ளுதல் அரிதானது–''ஒருவருக்கும் தீமைக்கு தீமை செய்யாதிருக்கப் பாருங்கள்''– அன்பு காட்ட ஏவப்படுதல் – நாம் சபையாக கூடிவருவது – நமது கூடுதல்களில் உள்ள விதங்களும் குணாதிசயங்களும்– உபதேசம் இன்னும் அவசியம்– கேள்விகளுக்கான தருணங்கள்–அனுகூலமான கூட்டங்களின் விளக்கம் – ''அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக் கடவன்''–அடக்க ஆராதனைகள்– தசமபாகங்கள், காணிக்கைகள், தானதருமங்கள். .... 349

# அத்தியாயம் 7

## புது சிருஷ்டியின் பிரமாணம்

ஒரு பிரமாணம் கொடுக்கப்படுதல் அதைக் காத்துக்கொள்ளத் திறமை உள்ளது என்பதைக் குறிக்கிறது – ஆதியிலேயே எழுதப்பட்டபடியான

திவ்விய பிரமாணம் –விழுந்து போன சந்ததியினருக்கு ஜீவனுக்குரிய பிரமாணம் கொடுக்கப்பட முடியாது – மீட்பு பிரமாணத்தின்படியல்ல, ஆனால் கிருபையின் படியாகும் – நியாயப்பிரமாணம் நிறைவேற்றப் பட்டு, கிறிஸ்துவின் ஒரே பலியினால் புது உடன்படிக்கை ஊர்ஜிதம் பண்ணப்பட்டது – சீனாய் மலைப் பிரமாணம் மாம்சீக இஸ்ரயேலருக்கு மாத்திரமே – புது உடன்படிக்கையின் பிரமாணம் – பரிசுத்தவான்களை அபிவிருத்தி செய்யும் பிரமாணம் – புது சிருஷ்டி தெய்வீக உறவிலும் உடன்படிக்கையிலும் வித்தியாசமானது, வேறுபட்டது – பரிபூரண பிரமாணத்தை மதிப்பதில் வளர்ச்சி பெறுதல்– இலக்கை நோக்கி ஓடுதலும் அங்கே நிலைத்து நிற்பதும்–பொன்னான கற்பனை– சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம். .... 455

## அத்தியாயம் 8

# புது சிருஷ்டியின் ஓய்வு நாள் அல்லது இளைப்பாறுதல்

சிலுவையிலிருந்து தெய்வீக விவகாரங்களின் காலத்தின் மாறுதல்கள் – அப்போஸ்தலர்கள் யூத ஜெப ஆலயங்களில் ஓய்வு நாளில் பிரசங்கித்தது யூத ஓய்வுநாளை அல்லது முறைமையை அங்கீகாரம் செய்து புது சிருஷ்டியின் மேல் திணிக்க அல்ல–ஒருவர் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் கட்டிடம் அவரது செய்தியை பாதிப்பதில்லை–அந்த நாளும் கூட பாதிப்பதில்லை– வாரத்தின் முதலாவது நாள் கிறிஸ்தவர்களின் ஓய்வுநாளாக ஆரம்பம்– இந்த ஆசரிப்பு கான்ஸ்டன்டைன் காலத்திற்கு வெகு முன்னரே ஆரம்பமானது – உயிர்த்த ஆண்டவரின் தரிசனங்கள் பெரும்பாலும் வாரத்தின் முதல் நாளிலேயே நிகழ்ந்தன– முதல் நாளை ஓய்வு நாளாக பொதுவாக ஆசரித்தது ஒரு நன்றியறிதலான காரியம்–எனினும் அது தேவ ஏற்பாடல்ல–பிரான்சு தேசமும் ஏழு என்கிற எண்ணும்– இஸ்ரயேலரின் ஓய்வு நாள் நிழலானது – புது சிருஷ்டியின் ஓய்வு நாள் எப்பொழுது ஆரம்பித்து எப்படி தொடருகிறது. .... 497



## அத்தியாயம் 9

# புது சிருஷ்டியின் நியாயத்தீர்ப்பு

யேகோவா தேவன் பூலோகத்தின் பெரிய நியாயாதிபதி – ஆசீர்வாதங்கள், நன்மைகள் முதலானவைகள் எல்லாம் யேகோவாவிடமிருந்து அவர் குமாரன் மூலமாக வருகிறது – புது சிருஷ்டி கிறிஸ்துவோடு கூட உடன் சுதந்திரரும் அவரோடு கூட இருப்பவர்களுமானவர்கள் –''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ''– மனுக்குலத்திற்கு ஆக்கினைத் தீர்ப்பு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது – ஆயிரவருட யுகத்தில் கிருபையுடனும் உதவியுடனும் கூடிய நியாயத்தீர்ப்பு – முடிவான தீர்ப்பு இரக்கமற்ற, நீதியுள்ள தீர்ப்பாக இருக்கும் – சுவிசேஷ யுகத்தின் போது, புது சிருஷ்டியின் நியாயத்தீர்ப்பு–பூரண அன்பின் பிரமாணத்தால் புது சிருஷ்டி நியாயந்தீர்க்கப்படுதல்– சரீரத்தின் மேலாக மகிமையான தலையின் மேற்பார்வை – ''நீ எதைக்கொண்டு நியாயந்தீர்க்கிறாயோ அதே தீர்ப்பினால் நீயும் தீர்க்கப்படுவாய்''– நம்மை நாமே சரியானபடி நியாயந்தீர்க்க வேண்டும்– ''என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே''– சபை சில காரியங்களை தீர்க்க வேண்டும் – ''உன் சகோதரன் உனக்கு விரோதமாக குற்றம் செய்தால்'' – ஏழெழுபது தடவை மன்னிக்க வேண்டும் – சபைக்கு எதிரான குற்றங்கள்–நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். .... 519

## அத்தியாயம் 10

# புது சிருஷ்டியின் ஞானஸ்நானம்

இரண்டாம் நூற்றாண்டில் உள்ள ஞானஸ்நானம்–ஞானஸ்நானத்தின் ஆதரவாளர்கள்–ரோம சபையின் ஞானஸ்நான சடங்காச்சாரங்கள் – குழந்தை ஞானஸ்நானம், ஏன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது – ஞானஸ்நானத்தைக் குறித்து வேத வாக்கியங்களின் சாட்சி –'' சீஷர்கள்'' சபையின் கருத்து – ''பேப்டிஸ்ட்'' சபையின் கருத்து – உண்மையான கருத்து–கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம் – ''எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்

பண்ணப்பட்டோம்''–அக்கினி ஞானஸ்நானம் – தண்ணீரால் செய்யப்படும் அடையாள ஞானஸ்நானம் –அடையாள ஞானஸ்நானம் அவசியமா?–சரியான அடையாளம்–யார் அதைக் கொடுக்கலாம் – உபயோகப்படுத்தப் படவேண்டிய வார்த்தைகள்–அடையாளத்தை திரும்பத் திரும்ப உபயோகிப்பது –''மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்.'' .... 555

## அத்தியாயம் 11

# புது சிருஷ்டியின் பஸ்கா

எகிப்தின் அடிமைத்தனமும் அதிலிருந்து விடுதலையும், நிழலும் பொருளும்–''முதற் பேறானவர்களின் சபை'' – ''நாம் அநேகராயிருந்தும் ஒரே அப்பமாக இருக்கிறோம்''– நினைவு கூறுதல் இன்னும் பொருத்தமானது–யார் இதை ஆசரிக்கலாம்–யார் இதை நடத்தலாம் – ஆராதனை முறைமை – ஈஸ்டர் பஸ்கா–மெக்ளின்டோக் (McClintock), ஸ்ட்ராங் (Strong) என்பவர்களின் வேத அகராதியிலிருந்து சில கருத்துக்கள். .... 607

## அத்தியாயம் 12

# புது சிருஷ்டியின் விவாகம் மற்றும் சிலாக்கியங்களும், கடமைகளும்

புது சிருஷ்டியின் பல்வேறு கடமைகள்–'' நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்''– தராதரமற்ற இணைப்பு கூறப்படவில்லை–தெய்வீக ஒழுங்கில் புருஷனும் ஸ்திரீயும்– மனிதன் தலையாக இருப்பது எதேச்சாதிகாரம் அல்ல–புது சிருஷ்டியின் விவாகம் – விவாக இணைப்பின் பல்வேறு நிலைமைகளில் புது சிருஷ்டிக்கான அறிவுரைகள்–கைவிடப்பட்ட நிலைமை ஏற்படும்போது– மனசாட்சியே கடைசியான பரீட்சை– அன்னகர்கள், கன்னிகைகள், பிரம்மச்சாரிகள்– ''ஆண்டவருக்குட்பட்டவர்கள்''–பெற்றோர்களின் பொறுப்பு. .... 645



## அத்தியாயம் 13

# பெற்றோர் என்ற முறையில் புது சிருஷ்டியின் கடமை

இனப்பெருக்கத்திற்கான சக்திகளுக்கு பயிற்சியும் பெரிதான கடமைகளாக சேர்க்கப்பட்டுள்ளது– பெற்றோரின் செல்வாக்குகள் – ''பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து''– நீதிமானாக்கப்பட்டு பிறந்த பிள்ளைகள்–இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே–கொள்ளை நோயான பொல்லாத யோசனைகள்–ஞாயிறு பள்ளிகளின் செல்வாக்கு–பிள்ளைகளின் நம்பிக்கை – பிள்ளையை நடத்துவதில் யோசனை கூறும் திறமை – ஆபத்துக் காலத்தில் நமது பிள்ளைகள்–முறையான கேளிக்கைகள் – புது சிருஷ்டியினுடைய பிள்ளைகளின் விவாகம் – நம்முடைய பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு உக்கிராணத்துவம். .... 691

## அத்தியாயம் 14

# புது சிருஷ்டியின் பலவிதமான பூலோக கடமைகள்

''எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளை செய்ய நாடுங்கள்''–''எதிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்''–''திரும்பக் கொடுப்பார்கள் என்று நம்பி கடன் தரவேண்டாம்''–கிறிஸ்தவ உபசரிப்பு–''நாளைய தினத்தைக் குறித்து கவலைப் படாதே''–''கிறிஸ்து மட்டுமே என் நம்பிக்கை''–''ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்''–காப்பீட்டு நிதி–பரஸ்பர உதவி போன்றவைகளுக்கான ஸ்தாபனம்–வீண் அலுவல்காரராய் இருப்பது–''தேவனை துதித்து மனிதனை சபிப்பது''–சமூக கடமைகள்–''எல்லா மனிதரையும் கனப்படுத்துங்கள்''– புது சிருஷ்டி பொது தேர்தலில் பங்கு பெறலாமா?–புது சிருஷ்டியும்

*மனமாற்றமும்–விலையேறப்பெற்ற வஸ்திரங்களை அணிதல் –'' மகிமையினாலும, கனத்தினாலும், அழியாமையினாலும்'' நாம் தரிக்கப்படக் காத்திருப்போம். .... 751*

## <u>அத்தியாயம் 15</u>

# புது சிருஷ்டியின் சத்துருக்களும், அவனுக்கு வருகிற தாக்குதல்களும்

*''பழைய மனிதன்''–புது சிருஷ்டிக்கு உலகம் ஒரு சத்துரு–பெரிய சத்துரு–ஆதியிலிருந்து அவன் ஒரு பொய்யனும், கொலைபாதகனுமாயிருக்கிறான்–பொல்லாங்கில் சாத்தானின் கூட்டாளிகள்– பிசாசுகளின் கூட்டங்கள்–சாத்தானின் முதல் பொய் எப்படி நிலைநிறுத்தப்பட்டது – கிறிஸ்தவ விஞ்ஞானமும், பிரம்ம ஞானமும்–''நாம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் மாத்திரம் போராடவில்லை'' – பொல்லாங்கான ஊழியம் – சத்துருவின் தாக்குதல்கள் – ''விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்'' – ''சாத்தானை சாத்தானே துரத்தினால்'' அவனுடைய இராஜ்யம் நலிவுறும்–நீதியை போற்றுங்கள் – அக்கிரமத்தை வெறுத்துத்தள்ளுங்கள்–மாற்கு 16:9–20 – பேர் கிறிஸ்தவ சபை புது சிருஷ்டிக்கு ஒரு சத்துரு–தேவனுடைய சர்வாயுதவர்க்கம். .... 801*

## <u>அத்தியாயம் 16</u>

# புது சிருஷ்டியின் தற்கால சுதந்தரம்

*ஆவியின் முதற்கனிகள்–சரியான நம்பிக்கைகளும் தவறான நம்பிக்கைகளும்–நம்முடைய நம்பிக்கை –பரதீசில் கள்ளன்–பரி. பவுலின் ஊக்கமான வாஞ்சை –'' நம்முடைய பூமிக்குரிய வீடும்'' ''நம்முடைய பரலோக வாசஸ்தலமும்''–மறுரூபக்காட்சி– மரித்தோரிலிருந்து முதலாவது எழுந்திருக்கவேண்டியவர்–புது சிருஷ்டியின் தற்கால சந்தோஷங்கள்–''கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்ளுவீர்கள்''– விசுவாசம் ஆவியின் ஒரு கனி, புது சிருஷ்டியின் தற்கால சுதந்தரத்தின் ஒரு பங்கு. .... 883*

## <u>அத்தியாயம் 17</u>

# புது சிருஷ்டியின் உயிர்த்தெழுதலின் சுதந்திரம்

*ஆவிக்குரிய காரியங்களை தெளிவாக புரிந்துகொள்ள விசுவாசக் கண்ணும் காதும் பயிற்சிக்கப்பட வேண்டும் –''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' – உயிர்த்தெழுதலுக்கு பின்னர் உள்ள வாழ்க்கை – அனாஸ்டசிஸ் – மறுபடியும் எழுதல் அல்லது உயிர்த்தெழுதல் – கடந்தகால பாவங்களுக்காக தண்டனையோ அல்லது தீர்ப்போ அல்ல; ஆனால் ஜீவனுக்கான இன்னொரு பரீட்சை – ''மரித்தோரிலிருந்து உயிர்த்தெழ பாத்திரவான்கள்'' – இந்த வாழ்க்கையின் பாவங்களுக்கான தண்டனை – ''சிலருடைய பாவங்கள் நியாத்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும்'' – ''(விசேஷமாக) மரித்தோரின் (பிரதான) உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்'' – ''இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை '' – '' அவருக்கு ஒப்பாயிருப்போம்.'' .... 931*